**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**

| தரம் :- 09 | இஸ்லாம் - I | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

**சுட்டெண்:- …………………..**

பகுதி - I

❖ **மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01) இறை கட்டளைக்கு மாறு செய்யாத படைப்பினம்
1. ஜின்கள் 2. மனிதர்கள் 3. மலக்குகள் 4. விலங்குகள்

02) மறுமை பற்றிய நம்பிக்கையை குறித்து நிற்பது,
1. தௌஹீத் 2. றிஸாலத் 3. மஆத் 4. திக்ர்

03) ஜம்உ செய்ய முடியுமான ஆனால் கஸ்ர் செய்ய முடியாத தொழுகையின் தொகுதி.
1. ளுகரும் அஸரும் 2. ம.்.ரிபும் இஷாவும்
3. இஷாவும் பஜ்ரும் 4. யாவும் பிழை

04) ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணிகளுள் **அடங்காதது,**
1. உடலுறவு கொள்ளல் 2. மாதவிடாய் ஏற்படல்
3. ஹைழ் நிபாஸ் 4. சிறுநீர் கழித்தல்

05) ஜனாசா தொழுகையின் இரண்டாம் தக்பீருக்கு பின்னர் செய்ய வேண்டியது,
1. சலாம் கொடுத்தல் 2. பாதிஹா ஓதல்
3. நபி மீது ஸலவாத்து சொல்லல் 4. பிரார்த்தித்தல்

06) இஸ்லாமிய ஆண்டின் இறுதி மாதம்,
1. முஹர்ரம் 2. டிசம்பர் 3. துல் க.்.தா 4. துல் ஹிஜ்ஜா

07) "சியாரதுல் குபூர் எனும் பதம் குறிப்பது,
1. கப்ருகளை வழிப்படல் 2. கப்ருகளை தரிசித்தல்
3. கப்ருகளை அலங்கரித்தல் 4. கப்ருகளை மூடுதல்

08) ஸஜ்தாக்களின் வகைகளில் குர்ஆனுடன் சம்பந்தப்பட்டது.
1. ஸஜ்தா ஸஹ்வு 2. ஸஜ்தா திலாவத்
3. ஸஜ்தா ஷுக்ர் 4. திக்ர் கல்பி

09) மஹ்ஷரில் பெரிய மன்றாட்டத்தில் ஈடுபடுபவர்.
1. நபி ஆதம் 2. நபி மூஸா 3. நபி ஈஸா 4. நபி முஹம்மது

10) வஹி நைரு மத்லுவ்வில் அடங்குபவை.
1. அல்குர்ஆன் - அல்ஹதீஸ் 2. ஹதீஸ் நபவி – ஹதீஸ் குத்ஸி
3. மத்ஹப் - மக்தப் 4. பெரியார்களின் கூற்றுகள்

11) மக்பராவை தரிசிப்பது மார்க்க அடிப்படையில்,
1. ஹராம் 2. மக்ரூஹ் 3. சுன்னத் 4. வாஜிப்



kalvi.lk

12) ஸஹீஹுல் புகாரியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை,
1. 6666 2. 114 3. 1500 4. 7275

13) முவத்தா எனும் நூலின் ஆசிரியர்
1. இமாம் முஸ்லிம் 2. இமாம் புஹாரி
3. இமாம் ஷாபிஈ 4. இமாம் மாலிக்

14) முற்பகலின் மீது சத்தியம் செய்து இறக்கப்பட்ட சூறா,
1. சூறா பாதிஹா 2. சூறா மாஊன்
3. சூறா பஜ்ர் 4. சூறா லுஹா

15) இஸ்னாத் என்பது ஹதீஸ் கலையின்
1. ஹதீஸ் மூல வாக்கியம் 2. அறிவிப்பாளர் தொடர்
3. திறனாய்வுக்கலை 4. இமாம்களை குறிக்கும்

16) "நாம் அல்லாஹ்வை பார்க்கா விட்டாலும் அவன் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்" என்பது,
1. அல் இஹ்ஸான் 2. அத் தக்வா
3. இஹ்லாஸ் 4. வரஉ

17) 18 நபிமார்களின் பெயர்களை உள்ளடக்கிய ஒரு சூறா,
1. பகரா 2. முல்க் 3. அன்ஆம் 4. வாகிஆ

18) ஒரு முஸ்லிமின் சொத்துக்களையும் அவனையும் தூய்மைப்படுத்தும் இபாதத்,
1. ஹஜ் 2. தொழுகை 3. ஸகாத் 4. நோன்பு

19) பிர்அவ்ன், ஹாமான், உபை இப்னு கலப் போன்றோருடன் எழுப்பப்படுபவர்கள்
1. தொழாதவர்கள் 2. ஸகாத் கொடுக்காதவர்கள்
3. நோன்பு நோற்காதவர்கள் 4. திக்ர் செய்யாதவர்கள்

20) தஸ்பீஹ் என்பது,
1. சுபஹானல்லாஹ் 2. அல்ஹம்து லில்லாஹ்
3. அல்லாஹு அக்பர் 4. தஸ்பீஹ் மணி

(2 x 20 = 40 புள்ளிகள்)



kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**

| **தரம் :- 09** | **இஸ்லாம் - II** | |
|---|---|---|

**பகுதி - II**

❖ **1ம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பாடசாலை மட்டக்கணிப்பீட்டுத் திட்டத்தில் நீர் தயாரித்த ஒப்படை தொடர்பான வினாக்கள்
   1) உமக்கு வழங்கப்பட்ட ஒப்படையின் தலைப்பு மற்றும் அதற்காக தகவல்கள் திரட்டப்பட்ட வழிமுறைகளையும் குறிப்பிடுக.
   2) ஒப்படை மூலம் நீர் பெற்ற பயன்கள் மூன்று தருக?
   3) தகவல்கள் சேகரிக்கும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் மூன்று தருக?
   4) அவற்றை தீர்க்க மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

3+3+3+3=12 புள்ளிகள்

2.
   1) கத்ர் அல்லது தக்தீர் என்பதன் மொழிக்கருத்து யாது?
   2) விதியை நம்புவதால் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் 3 தருக?
   3) தற்கொலைக்கு முயற்சிக்கும் ஒருவருக்கு நீர் கூறும் உபதேசம் என்ன?

3 x 4 = 12 புள்ளிகள்

3.
   1) ஹலால், ஹராம் என்றால் என்ன?
   2) செல்வம் பகிரப்படும் வழிமுறைகள் மூன்று தருக?
   3) செல்வம் திரட்டப்படும் தவறான வழிமுறைகள் மூன்று தருக?

3 x 4 = 12 புள்ளிகள்

4.
   1) ஹதீஸின் பிரதான இரு பிரிவுகளும் யாவை?
   2) பிரபல்யமான ஹதீஸ்கிரந்தங்களில் 4ஐ மட்டும் குறிப்பிடுக.
   3) ஹதீனை பின்பற்றுவதன் அவசியம் பற்றிய ஒரு திருமறை வசனத்தின் கருத்தை தருக?

3 x 4 = 12 புள்ளிகள்

5.
   1) மத்ஹப் என்றால் என்ன?
   2) பிக்ஹ் துறை இம்மாம்கள் நால்வரது பெயர்களை தருக?
   3) அத்துறையின் மூலம் இஸ்லாமிய உம்மத் அடைந்த பயன்களை பட்டியல் படுத்துக.

3 x 4 = 12 புள்ளிகள்



kalvi.lk

6.

1) நாம் பிறருக்கு ஏவ வேண்டிய நற்செயல்கள் மூன்று தருக?
2) ஒரு முஸ்லிம் குடும்பத்தில் வளர்க்கப்பட வேண்டிய பண்புகள் சிலவற்றை குறிப்பிடுக.
3) ஒரு முஸ்லிமின் வீடு எவ்வாறு அமைய வேண்டும். விளக்குக?

3 x 4 = 12 புள்ளிகள்

7. சிறுகுறிப்பு எழுதுக.

1. மீஸான்
2. ஸலாதுல் கஸ்ர்
3. யவ்முல் ஹஷ்ர்
4. அஜ்னபி

3 x 4 = 12 புள்ளிகள்

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457